நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாடிப்பட்டி,
**முன்னிலை:** திருமதி.எஸ்.வேங்கடலெட்சுமி எம்.எல்.,
நீதித்துறை நடுவர், வாடிப்பட்டி.
**2023**ம் ஆண்டு **ஜூலை** திங்கள் **18**ஆம் நாள் **செவ்வாய்கிழமை**
**CNR.No. TNMDIE 000777-2017**
சுருக்குப்பட்டியல் வழக்கு எண்: **47/2017**

முருகேசன், வயது 50
த/பெ. அழகக்கவுண்டர்
ராசி ஹார்டுவேர்ஸ், பாபா பஜார்,
அலங்காநல்லூர் தாலுகா,
வாடிப்பட்டி தாலுகா,
மதுரை மாவட்டம் - 625 501.

: புகார்தாரர்/முறையீட்டாளர்

//எதிர்//

வேலவன், வயது சுமார் 45
த/பெ. செல்வம்,
மணிகண்டன் தெரு,
கலைவாணர் நகர்,
கல்லணை கிராமம், அலங்காநல்லூர் (அஞ்சல்)
வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம் 625 501.

: எதிரி/எதிர் மனுதாரர்

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | S.T.C. No.47/2017 |
| 2. | Name of the Police Station and the Crime Number of the offence | Not applicable since this case is a private complaint case on the offence U/s.138 and 142 of NI Act |
| 3. | Name of the accused | S. Velavan |
| 4. | Father's name of the accused | Selvam |
| 5. | Occupation of the accused | Finance |
| 6. | Residence of the accused | Manikandan Street, Kalaivanar Nagar, Kallanai Village, Alanganallur (Post). Vadipatti (TK). |
| 7. | Age of the accused | 45/2017 |
| 8. | Occurrence | N/A |
| 9. | Date of Complaint | N/A |
| 10. | Date of Apprehension | Nil |
| 11. | Release on Bail | Nil |
| 12. | Commitment | Not applicable |

| | | |
|---|---|---|
| 13. | Commencement of Trial | 25.01.2019 |
| 14. | Closure of Trial | 20.06.2023 |
| 15. | Sentence of Order | N/A as Complaint dismissed and accused is acquitted. |
| 16. | Service of copy of Judgment or finding on accused | No |
| 17. | Explanation of delay | Nil |

இந்த வழக்கு **26.05.2017**ம் தேதி இந்நீதிமன்றத்தில் STC No. 47/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கு, கடந்த **14.07.2023-**ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. இந்த வழக்கானது மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 உ/இ பிரிவு 142ன் கீழாக காசோலை திருப்பப்பட்டதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2. 05.03.2017 தேதியிட்ட கரூர் வைசியா வங்கி காசோலை எண். 00010 27.03.2017 அன்று போதிய பணமில்லை என திருப்பப்பட்டதாகவும், வழக்கறிஞர் அறிவிப்பு 30.03.2017 தேதியில் அனுப்பப்பட்டு 01.04.2017 தேதியில் வழக்கின் எதிரி பெற்றுக்கொண்டதாக புகார் மனுவானது 15.05.2017 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
3. புகார்தாரர், வழக்கின் எதிரியிடமிருந்து சொத்து வாங்குவதற்காக கிரைய ஒப்பந்தமானது வாய்மொழியாக ஏற்பட்டதாகவும், மேற்படி வாய்மொழி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், கிரையத்திற்காக முன்பணமாக ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் ) கொடுத்ததாகவும், மேற்படி ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து லட்சம்)யும் திருப்பி தராமல் கிரையத்தையும் பதிவு செய்து தராத காரணத்தினால், குற்ற வழக்காக குற்ற எண். 545/2016 ஆக முதல் தகவல் அறிக்கையானது அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் பதிவு

செய்யப்பட்டதாகவும், அதற்காக 4 காசோலைகளை உரிய வங்கியில் செலுத்தி தொகையை பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தி, சாட்சிகள் முன்னிலையில் கொடுத்ததாகவும், மேற்படி 4 காசோலைகளில் ஒன்றான காசோலை எண். 000110 காசோலையானது 05.03.2017 தேதியிட்டு வழங்கியதை வசூலுக்காக வழக்குபுகார்தாரர் செலுத்தியபோது, மேற்படி காசோலையானது 27.03.2017 தேதியில் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டதாகவும், அதனால் உரிய வகையில் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பி, அதை பெற்றுக்கொண்டும், மீண்டும் செலுத்துவதற்கான எந்தவித நடவடிக்கையும் எதிரி எடுக்காத காரணத்தினால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் கண்டுள்ளது.

**4.** வழக்கில் ஆஜரான எதிரியிடம் கேள்வி கேட்டபோது, தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்துள்ளார்.

**5.** புகார்தாரர் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். புகார்தாரர் தன்னை ம.சா.1 ஆகவும் கூடுதல் சாட்சியாக மருதுபாண்டி என்பவரை ம.சா.2 சாட்சியாகவும் விசாரித்துக்கொண்டு அவர்கள் மூலமாக மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 6 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2வது சாட்சியின் மூலமாக அவரது ஆதார் அடையாள அட்டை மட்டும் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.** எதிரியை எதிரி சாட்சியாக விசாரிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் அவர் எதிரி தரப்பு சாட்சி -1 ஆக எதிரி விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரிக்கப்பட்டாலும் அவர் மூலமாக எந்தவித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** புகார்தாரரின் வழக்குப்படி, சொத்தை கிரையமாக வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட முன் பணத்திற்காக வழக்கு எதிரி தரப்பில் கொடுக்கப்பட்ட காசோலை மேற்படி காசோலையை வசூலுக்கு செலுத்தியபோது, போதிய பணம் இல்லையென திருப்பப்பட்டதனால் இந்த புகார்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது.

**8.** வழக்கு எதிரி தரப்பில் மேற்படி காசோலையானது காவல் நிலையத்தில்

வைத்து காவல் ஆய்வாளரிடம் தேதி, பெயர் குறிப்பிடப்படாமல் கொடுக்கப்பட்டதாகவும், மேற்படி காசோலையை வழக்குபுகார்தாரர் தவறுதலாக பயன்படுத்தியுள்ளதாகவும், வழக்கிற்குரிய வழக்கறிஞர் அறிவிப்பு உரிய சரியான முறையில் சார்பு செய்யப்படவில்லையெனவும் ஏராளமான ஆட்சேபணைகளை தெரிவித்து 2 சாட்சிகளையும் எதிரி தரப்பில் விசாரணை செய்து எ.ம.சா.ஆ.1 ஆக எதிரி மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலையும் தாக்கல் செய்து புகார்தாரரின் புகார்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என வாதிடப்பட்டுள்ளது.

**9.** எதிரி தரப்பு வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தின் முன்பு *V.A சிவராமன் எதிர் வாசு* என்ற வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், காவல்நிலையத்தில் வைத்து கட்டாயத்தின் பேரில் பெறப்படும் காசோலைகளை பொறுத்து சட்டரீதியான கடமையோ, கடப்பாடோ ஏற்படாது என சொல்லி என வாதிட்டு மேற்படி வழக்கை முன்னிலைப்படுத்தியுள்ளார்.

**10.** இந்த வழக்கில் கண்ட சாரம்சத்தின் அடிப்படையில் ஆய்வு செய்கையில், நீதிமன்றமானது விவாதித்துள்ள விபரங்களை பொறுத்து ஆய்வு செய்கையில், மேற்படி காசோலையானது பணம் செலுத்த தேவையில்லை என நிறுத்தம் செய்யப்பட்டு வேண்டுகோள் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் Stop Payment என நிறுத்தப்பட்டு, அதனடிப்படையில் எழுந்த புகார் மனுவாக கண்டுள்ளது. ஆனால், இந்த வழக்கினை பொறுத்தவரை எதிரி தரப்பில், காசோலையை மறுக்கவோ, காசோலையை பொறுத்து பணத்தை செலுத்த தேவையில்லையென வங்கிக்கு தகவல் தெரிவிக்கவோ இல்லை. அதேபோல், மனுதாரர் தரப்பில் எதிரியை குறுக்கு விசாரணை செய்தபோதும், எதிரி வழங்கப்பட்ட 4 காசோலைகளில் இரண்டு காசோலைகளுக்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டு விட்டதாகவும், அது குறித்து எந்த வழக்கு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையெனவும் சாட்சியம் அளித்துள்ள நிலையில், பகுதி பகுதியாக பிரித்து பணம் செலுத்த வேண்டும் என்பதை மற்ற இரண்டு காசோலைகளை பொறுத்து ஒப்புக்கொண்டும், தற்சமய வழக்கு காசோலையை பொறுத்து பணம் செலுத்த தேவையில்லையென பிரித்து மறுக்கக்கூடியதுமாக வழக்கு எதிரி தரப்பு நிலைப்பாடு இல்லாத

காரணத்தினால், இந்த எதிரி தரப்பு வாதத்தை ஏற்கும் விதமாக இல்லையென இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**11.** வழக்கில் கண்ட எதிரி தரப்பில் ஏற்படுத்தியுள்ள ஆட்சேபணைகளை பொறுத்து ஆராய்கையில், இந்த வழக்கு நிலைநிற்கக்கூடியதா? என்பதை பார்ப்பதற்கு முன்பாக இந்த நீதிமன்றம் பார்க்கவேண்டியது வழக்கு புகார்தாரர் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளாரா என்பது.

**12.** வழக்கில் கண்ட அசல் காசோலையானது நீதிமன்றத்தின் முன்பு ஒப்பீடு செய்யப்பட்டு, ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசோலையை வங்கியில் செலுத்தியதற்கான செலான் ம.சா.ஆ.2 ஆகவும், திருப்புதல் மெமோ ம.சா.ஆ.3 ஆகவும் வழக்கறிஞர் மூலமாக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.4 ஆகவும், அதை எதிரி பெற்றுக்கொண்டார் என காட்டக்கூடிய இணையதள பதிவிறக்க நகலானது ம.சா.ஆ.5 ஆகவும், எதிரி மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட கூடுதல் சாட்சியின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் மேற்படி அதே முதல் தகவல் அறிக்கையானது சான்றிட்ட நகலாக எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**13.** இந்த வழக்கில் முறையான அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லையென எதிரி தரப்பில் ஆட்சேபணை செய்துள்ள வகையில் ஆய்வு செய்கையில் 31.03.2017 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டதாக சொல்லி ரசீதும் 31.03.2017 அன்று அனுப்பப்பட்ட ரசீதானது 01.04.2017 தேதியில் டெலிவரியானதாக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**14.** மேற்படி ம.சா.ஆ.5 ஏற்கக்கூடியதில்லை என சொல்லி எதிரி தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. 30.03.2017 அன்று அனுப்பப்பட்டதாக கண்ட அறிவிப்பை மறுதினம் அஞ்சலில் செலுத்தியதை ஒரு தவறாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் ஒப்புகை அட்டை தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

15. ஆனால், மனுதாரர் தரப்பு ஆவணங்களை ஆய்வு செய்கையில், மனுவில் கண்ட காசோலையில் கண்ட தேதி 05.03.2017. மேற்படி காசோலையானது வங்கியில் செலுத்தப்பட்டதாக சொல்லி ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள செலான் என்பது ஒரு வங்கியில் காசோலையை செலுத்திய நபரிடம் முழு செலானாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. செலானின் முக்கிய பகுதியானது வங்கியின் காசோலையுடன் வைத்துக்கொள்ளப்பட்டு, 'கவுண்டர்பாயில்' மட்டுமே மேற்படி காசோலையை செலுத்திய நபரிடம் வங்கியின் முத்திரை பதிக்கப்பட்டு, திருப்பி தரப்படும் என்பது தான் நடைமுறை. ஆனால், இந்த நீதிமன்றத்தில் தேதி குறிப்பிடப்படாமல் பூர்த்தி செய்யப்பட்ட செலான் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதற்காக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நீதிமன்றத்தால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஒரு வேளை இந்த செலான் மூலமாக மேற்படி காசோலை எண் 000110 ஆனது வங்கியில் செலுத்தப்பட்டதற்காக என புகார்தாரர் சொல்வாரேயானால், அது ஏற்கக்கூடியதில்லை. 27.03.2017 தேதியில் திருப்புதல் மெமோ வழங்கப்பட்டதாக ம.சா.ஆ.3 ஆனது தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. ம.சா.ஆ.2 வழக்கிற்கு சந்தேகத்திற்குரிய சூழலை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது.

17. வழக்கில் கண்ட புகார்தாரரின் வழக்குப்படி வாய்மொழி ஒப்பந்தமானது ஏற்பட்டதாகவும், அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.5,00,000/- தொகை கொடுத்ததாகவும், அந்த தொகையை திருப்பி தராத காரணத்தினால் எதிரி காசோலையாக வழங்கியதாகவும் கண்டுள்ளது.

18. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட கூடுதல் சாட்சி ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து லட்சம்)த்தை எதிரி பெற்றுக்கொண்டதற்காக ஆவணம் ஒன்றில் கையொப்பமிட்டு கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அப்படி புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பிற்கு இடையே ஏற்பட்டதாக சொல்லப்படும் ஒப்பந்த பத்திரம் எதையும் புகார்தாரர் தரப்பில் இந்த நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யவில்லை. புகார்தாரர் தரப்பில் கூடுதலாக விசாரிக்கப்பட்ட சாட்சியே ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட முன்

தொகையை திருப்பி தருவதற்காக ஒப்புக்கொண்டு காவல் ஆய்வாளர் வசம் வழக்கு காசோலையானது கொடுக்கப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**19.** காவல் ஆய்வாளரிடம் குற்றவியல் வழக்கானது பதிவு செய்யப்பட்ட நிலையில், எதிரி பெயர் மற்றும் தேதி குறிப்பிடப்படாமல் காசோலையை கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி காசோலையானது வற்புறுத்துதலின் பேரில் பெறப்பட்டதாக சொல்லி எதிரி தரப்பில் வாதம் செய்யாத நிலையில் மாற்றுமுறையாவணச்சட்டப்பிரிவின் கீழான வழக்கில் அடிப்படையில் அனைத்து அனுமானங்களும் வழக்குபுகார்தாரருக்கு ஆதரவாகவே உள்ளது என்று சட்டத்தின் நிலைப்பாடு இருந்தாலும் அடிப்படை வழக்கை நிரூபணம் செய்ய வேண்டிய கடமையானது வழக்கு புகார்தாரருக்கு உள்ளது.

**20.** இந்த வழக்கை பொறுத்தவரை ஏற்கனவே உள்ள தனது கடமையை தீர்ப்பதற்காக காசோலையானது வழங்கப்பட்டது என்பதை பொறுத்து வழக்கு புகார்தாரர் எதிரிக்கு எதிராக சொல்லும் சூழ்நிலை என்பது, ஏற்கனவே கிரைய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதாகவும், அதற்காக கொடுக்கப்பட்ட முன் பணத்தை எதிரி திருப்பி கொடுக்கவில்லையெனவும் அதற்காக குற்றவியல் வழக்கானது பதிவு செய்யப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் அதற்காக காசோலையை எதிரிக்கு வழங்கியதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்குபுகார்தாரர் இந்த நீதிமன்றத்தின் முன்பு குறியீடு செய்துள்ள ஆவணங்களில் அடிப்படையாக காசோலை வழங்கப்பட்டது என்பதையும், மேற்படி காசோலை உரிய வங்கியில் செலுத்தப்பட்டபோது அது திருப்பப்பட்டது என்பதையும், அதற்கு சட்டப்படியான வழக்கறிஞர் அறிவிப்பானது குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் வழக்கறிஞர் மூலமாக அனுப்பப்பட்டது என்பதையும், மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்ட பிறகும் எதிரி காசோலைக்கான தொகையை செலுத்த முன் வரவில்லையென்பதையும், உரிய கால அவகாசத்திற்குள் புகார்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் வழக்குபுகார்தாரர் நிரூபணம் செய்திட வேண்டியது அவசியம்.

**21.** இந்த வழக்கை பொறுத்தவரை வழக்குபுகார்தாரர் தரப்பில் காசோலைக்காக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பானது சார்பு செய்யப்பட்டதற்கான நகலாக வெறும் இணையதள பதிவிறக்க சான்று நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு ஒப்புகை அட்டை பெறாததற்கு என்ன காரணம் என்பதை புகார்தாரர் தரப்பில் விளக்கவும் இல்லை. ஒப்புகை அட்டை வராது போனால் கூட அஞ்சல் துறைக்கு மேற்படி பதிவுதபாலானது செலுத்தப்பட்டதாக சொல்லி அதை பெற்றுக்கொண்ட நபரின் விபரங்களை தெரிவிக்கும்படி விண்ணப்பம் அளிக்கப்பட்டால், அஞ்சல் துறையிலிருந்து அதற்காக சான்றிட்ட கடிதமானது கொடுக்கப்படும். மேற்படி சான்றிட்ட கடிதமானது நீதிமன்றத்தின் முன்பு அங்கீகரிக்கப்படக்கூடிய ஆவணம். ஆனால், அந்த ஆவணமானது இந்த நீதிமன்றத்தின் முன்பு சட்டரீதியான அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்படவில்லை என்பது முக்கியமானது.

**22.** மற்றொரு சங்கதி, இந்த வழக்கில் கண்ட காசோலையானது வங்கியில் செலுத்தப்பட்டு, திருப்பப்பட்டதற்கு இடைப்பட்ட விபரமாக இந்த நீதிமன்றத்தின் முன்பாக ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் செலான் எதற்காக இந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்பதை இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ளமுடியவில்லை. 2019ம் ஆண்டு மேற்படி ஆவணமானது குறியீடு செய்யப்பட்டபோது, அங்கீகரிக்க முடியாத மேற்படி ஆவணத்தை எந்தவகையில் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது என்பதையும் இந்த நீதிமன்றத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. 25.01.2019 அன்று புகார்மனுதாரரை விசாரித்தபோது, மேற்படி செலான் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த செலானில் வங்கியின் முத்திரையும் இல்லை. மொத்த செலானும் மனுதாரர் வசம் இருந்தால் அந்த செலான் வங்கியில் செலுத்தப்பட்டதாக கருதிக்கொள்ள முடியாது. மேற்படி செலானில் குறிப்பிட்ட தேதியும் இல்லாத நிலையில், மேற்படி செலானது இந்த நீதிமன்றத்தின் முன்பு தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெளிவாக தெரியவருவதால், அதனை சாட்சியத்தில் ஏற்கக்கூடிய ஆவணமே கிடையாது.

23. இந்த நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையும் மேற்படியாக ஏற்க முடியாத ஆவணமாக தான் இந்த நீதிமன்றத்தின் முன்பு குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு எதிரியின் பெயரில் இதச பிரிவு 420, 406, 506(i)ன் கீழாக இந்த புகார்மனுதாரர் கொடுத்த புகார்மனுவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் மேற்படி முதல் தகவல் அறிக்கையானது வெறும் நகல் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அந்த நகல் ஆவணத்தை இந்த நீதிமன்றத்தின் முன்பு 25.01.2019 அன்று வழக்குபுகார்தாரரை ம.சா.1 ஆக விசாரிக்கும்போது, எப்படி ஏற்றுக்கொண்டு குறியீடு செய்தார்கள் என்பதை உணர முடியவில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையை பொறுத்து எதிரி தரப்பில் ஆட்சேபணை செய்யாத காரணத்தினால் நகல் ஆவணத்தை ஆவணமாக அங்கீகரிக்க முடியுமா என்றால், இந்திய சாட்சிய சட்டப்படி 2ம் நிலை ஆவணத்தை இந்த நீதிமன்றத்தின் முன்பு அங்கீகரித்திட வழியில்லையென இந்த ஆவணத்தின் தன்மையைப் பார்க்கும்போது இந்த நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது.

**24.** அசல் வழக்கில் தனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை காசோலையாக எதிரி கொடுத்தார் என்றும், அது போதிய பணம் இல்லாமல் திருப்பி செலுத்தப்பட்டுள்ளதாகவும் நிரூபிக்கப்பட்டால் மட்டுமே வழக்கில் கண்ட புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானித்துக்கொள்ளமுடியும். நிரூபிக்கும் தன்மை என்பது மனுதாரர் மற்றும் எதிரி தரப்பிற்கு இடையே கடிகாரத்தில் கண்டுள்ள பெண்டுலம் போல் மாறி மாறி ஏற்படக்கூடியது தான். இந்த மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களே புகார்தாரரின் வழக்கை சந்தேகத்திற்கிடமாக மாற்றியிருப்பதாக இந்த நீதிமன்றம் கருதுவதாலும், மனுவில் கண்ட மனுதாரர் சார்ந்துள்ள வழக்கு அனைத்திற்கும் அடிப்படை சாட்சியமாக அவர் சார்ந்துள்ளது வாய்மொழி சாட்சியங்கள் மட்டுமே என்கிற நிலையிலும், இந்த மாற்றுமுறையாவண சட்டம் பிரிவு 118ன் கீழான அனுமானத்தை வழக்குபுகார்தாரர் இந்த வழக்கில் பெற்றுக்கொள்ள முடியாது என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**25.** வழக்கு காசோலையானது மொத்தம் 4 காசோலைகளாக வழங்கப்பட்டு, 2

காசோலைகள் ஏற்கனவே வசூலுக்கு செலுத்தப்பட்டு, பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டிருந்தால் கூட மேற்படி காசோலைகளின் எண்களை இந்த நீதிமன்றத்தின் முன்பு மேற்படி புகார்தாரர் தரப்பிலிருந்து சொல்லப்படவில்லை.

26. இதே நீதிமன்றத்தில் வழக்கில் கண்ட எதிரி தரப்பில் ஏற்படுத்தியுள்ள Material Alteration என முக்கிய பகுதிகளை வழக்கு காசோலைகளை பொறுத்து மாற்றம் செய்தால் என்பதைக் குறித்து ஏற்படுத்தியுள்ள ஆட்சேபணை நிராகரிக்கத்தக்கதாக இந்த நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது. மாற்றுமுறையாவணம் என்பது பெயரிட்டு கொடுக்கப்படவேண்டிய அவசியம் இருப்பதாக இந்த நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது.

27. ஆய்வாளர் வசம் காசோலை ஒப்படைக்கப்பட்டதாகதான் புகார்மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சி சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் மேற்படி காசோலையானது ஏற்கனவே உள்ள கடமையை தீர்க்கும் விதமாக வழக்குபுகார்தாரருக்கு கொடுக்கப்படவில்லை என்று சொல்வார்களேயானால், அது ஆய்வாளருக்கு லஞ்சமாக கொடுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு தெளிவான விளக்கம் ஏதும் கொடுக்கப்படாது போனால் கூட மேற்படி காசோலையானது வழக்குபுகார்தாரருக்கு தான் வழங்கப்பட்டது என்பதை புகார்தாரரே சொல்லவில்லை.

28. என்னதான் புகார்தாரர் மற்றும் எதிரிக்கு இடையேயான வழக்கு சம்பந்தப்பட்டு இருதரப்பு வாதங்களும் ஏகப்பட்ட ஆட்சேபணைகளை செய்திருந்தாலும் வழக்கு காசோலையை வழக்கு எதிரி ஆட்சேபணை செய்யவில்லை. அதில் கண்ட கையெழுத்தை ஆட்சேபணை செய்யவில்லை. தான் கொடுத்த தொகையை பொறுத்து அதை வேறு தொகையாக திருத்தம் செய்து விட்டதாக வழக்கு எதிரி ஆட்சேபணை செய்யவில்லை. புகார்தாரரின் பெயரை பூர்த்தி செய்யாமல் கொடுத்துள்ளதாக சொல்லப்பட்ட விபரத்தை பொறுத்து வழக்குபுகார்தாரருக்கு எதிராக அனுமானித்திட வேண்டிய அவசியம் இருப்பதாக இந்த வழக்கில் இல்லை. ஏற்கனவே, சொத்து விற்பனை தொடர்பாக வழக்கு எதிரி மற்றும் புகார்தாரருக்கு இடையே இருந்த முன் நடவடிக்கையானது எதிரி தரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுதான்

உள்ளது. அந்த வகையில், ஏற்கனவே இருந்த கடனை தீர்ப்பதற்காக இந்த காசோலைகளானது கொடுக்கப்பட்டது என வழக்குபுகார்தாரர் தரப்பில் சொல்லியுள்ள வாதத்தை முற்றிலும் நிராகரிக்கக்கூடிய விதமாக எதிரி தரப்பில் கட்சியை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மை. இருந்தாலும் இந்த வழக்கில் வழக்கு புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்ட 2வது ஆவணம் வங்கியில் காசோலையை செலுத்தியதற்கான செலனாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேண்டுமென்றே உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாக தெரியவருகிற நிலையில், நீதிமன்றத்தின் முன்பு வழக்காடும் ஒரு நபர் உண்மையான ஆவணங்களை தாக்கல் செய்து உண்மையான தகவல்களை தான் தரவேண்டும் என்பது சட்டத்தின் நியதி. அதற்கு முரண்பட்டதாக வழக்கு புகார்தாரர் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தை ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளதாக இந்த நீதிமன்றத்திற்கு தோன்றக் கூடிய காரணத்தினாலும், வழக்கில் கண்ட வழக்கு உற்பத்திக்குரிய அடிப்படை தேவையான சட்டப்படியான அறிவிப்பானது வழக்கு எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் விபரத்தை பொறுத்து எழுப்பியுள்ள சந்தேகத்திற்கு இணையதள பதிவெறக்க நகல் சான்று மட்டுமே போதுமானதாக இல்லையென்கிற நிலையிலும், கூடுதலாக சட்டப்படியான அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதாக புகார்தாரர் தரப்பிலிருந்து எந்தவித கூடுதல் நிரூபணமும் இல்லாத நிலையிலும், இந்த வழக்கை வழக்கு புகார்தாரருக்கு ஆதரவாக தீர்மானிக்க வேண்டியதில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**29.** முடிவாக, எதிரிக்கு எதிரான மாற்று முறை ஆவணச்சட்டப்பிரிவு 138 உ/இ பிரிவு 142ன் கீழான மோசடி குற்றமானது வழக்கு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்க தவறிவிட்டதாக கருதி எதிரியை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1)ன் கீழாக இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்தும், வழக்குபுகார்தாரரின் புகார் மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக

கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஓம். எஸ். வேங்கடலெட்சுமி)
நீதித்துறை நடுவர்,
வாடிப்பட்டி.

**<u>புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

ம.சா.1- முருகேசன்
ம.சா.2- மருதுபாண்டி

**<u>புகார்தாரர் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

ம.சாஆ.1 காசோலை எண் 000110 காசோலை நகல்
ம.சாஆ.2 காசோலை செலுத்தப்பட்டதற்கான கரூர் வைசியா வங்கி செலான் அசல்
ம.சாஆ.3 27.03.2017-கரூர் வைசியா வங்கியின் திருப்புதல் மெமோ அசல்
ம.சாஆ.4 30.03.2017ம் தேதியில் எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு கை நகல்
ம.சாஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட இணையதள சான்று
ம.சா.ஆ.6 22.12.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.7 ம.சா.2ன் ஆதார் அடையாள அட்டை நகல்.

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

எ.ம.சா.ஆ.1 - வேலவன்
எ.ம.சா.ஆ.2 - பாண்டியன்

**<u>எதிரி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

எ.ம.சா.ஆ.1- 22.12.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல்

(ஓம். எஸ். வேங்கடலெட்சுமி)
நீதித்துறை நடுவர்
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//

STC.No. 131/2017

Date: 18.07.2023

எதிரி: வேலவன் த/பெ. செல்வம்
புகார்தாரர்: முருகேசன் த.பெ. அழகக்கவுண்டர்

**<u>தீர்ப்புரை:</u>**

தீர்ப்பு பகரப்பட்டது. எதிரி மற்றும் புகார்தாரர் ஆஜர்.

முடிவாக, எதிரிக்கு எதிரான மாற்று முறை ஆவணச்சட்டப்பிரிவு 138 உ/இ பிரிவு 142ன் கீழான மோசடி குற்றமானது வழக்கு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்க தவறிவிட்டதாக கருதி எதிரியை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1)ன் கீழாக இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்தும், வழக்குபுகார்தாரரின் புகார் மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

நீதித்துறை நடுவர்,
வாடிப்பட்டி.